கிறது. நூற்பாலை சம்பந்தமாக நாசரத்திலும், பேட்டையிலும் ஏற்கனவே இரண்டு மில்கள் இயங்கி வருகின்றன. அவை தற்போதைய நெசவாளர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. பேட்டையில் இன்னும் அதிகமாக தேவை என்ற நிலை ஏற்பட்டால், சி பிரிவு ஒன்றையும் சரியான இடத்தில் ஆரம்பிக்க அரசு பரிசீலனை செய்து வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடைப்பாடி நகரில் பொதுப்பணித் துறை தங்கும் விடுதி.

*வினா எண். 198— திரு. இ. கணேசன் : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி தொகுதி, இடைப்பாடி நகரில், பொதுப்பணித்துறையின் பொறுப்பில் புதிய 'தங்கும் விடுதி' கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 10-10]

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைப்பாடி தொகுதியிலே 3 ஒன்றிய பஞ்சாயத்துகளும் 500-க்கும் மேற்பட்ட ஜனத் தொகை இருக்கின்ற நகர சபையும் இருக்கிற காரணத்தாலும், பல அலுவலகங்கள் இருக்கின்ற காரணத்தாலும் அங்கே இருக்கக்கூடிய ஒரு சிறிய பயணர் விடுதி அங்கே வரக்கூடிய அதிகாரிகள் தங்குவதற்கு வசதி இல்லாமல் இருக்கின்றது. அதைக் கருத்திலே கொண்டு ஒரு புதிய பயண' விடுதியைக்கட்ட அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண் புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே., இடைப்பாடியிலே பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான ஒய்வு இல்லம் இல்லை. இருப்பினும் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ஓய்வு இல்லம், 2 அறைகள் கொண்ட இல்லம் இருக்கின்றது. அது நல்ல நிலையில் உள்ளது. அந்த ஓய்வு இல்லம் அங்கே வரக்கூடிய அதிகாரிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. இடைப்பாடிக்கு

1981 பிப்ரவரி 5]

15 கி.மீ. தொலைவில் உள்ள சங்கரியில் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ஒரு ஓய்வு இல்லமும், இடைப்பாடிக்கு 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஓமலூரில் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ஒரு ஓய்வு இல்லமும் இருக்கின்றன. அவைகள் அந்த வட்டாரத்தில் வருகின்ற அதிகாரிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற காரணத்தால், மேற்கொண்டு ஒரு புதிய ஓய்வு இல்லத்தை இடைப்பாடியில் கட்டும் உத்தேசம் இல்லை.

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, இடைப்பாடியிலே பல அலுவலகங்கள் இருக்கின்றன. அதனால் பல அதிகாரிகள் வந்து தங்குகின்றனர். அவர்களுக்கு வசதிகள் இல்லை. டெலிபோன் வசதிகூட அந்த பயணர் விடுதியிலே இல்லை. அதை ஏற்படுத்தித் தர இயலுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடுதியே இல்லை, பின்னர் டெலிபோன் எதற்கு. விடுதி கட்டியதற்குப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

அனாதை இல்லங்கள்.

*வினா எண். 199— திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனாதை குழந்தைகள் என்று சொல்லுவதற்காக அவர்களுக்கு வழங்கும் சர்டிபிகேட்டிற்காக ரூபாய் 300 என்று உறுதிபடுத்தியிருக்கும் தொகையை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் எப்பொழுது செயல் படுத்தப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழகத்தில் அனாதைக் குழந்தைகள் என சான்றிதழ் வழங்குவதற்காக நிர்ணயம் செய்யப்பட்ட ஆண்டு வருமானம் ரூபாய் 300-ஐ ரூபாய் 1,200 என்று உயர்த்தி ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(ஆ) உயர்த்தப்பட்ட ஆண்டு வருமான வரம்பு இனி குழந்தைகளை அனாதை இல்லங்களில் சேர்க்கும் பொழுது பின் பற்றப்படும்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது உயர்த்தப்பட்டது. அதை விரைவிலே செயல் முறைக்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.